நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

நமது தினகனி
NAMADHU DHINA KANI
தமிழ் நாளிதழ்
RNI-TNTAM/2023/88253




| Vol: 02 | Issue: 22 | 4 Pages | 22.8.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 22 | 4 பக்கங்கள் | 22.8.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**மன்னுயி ரோம்பி அருளாள்வாற் கில்லென்ப**
**தன்னுயி ரஞ்சும் வினை**

**விளக்கம்:**
தன் உயிரின் பொருட்டு அஞ்சி வாழ்கின்ற தீவினை, உலகில் நிலைபெற்றுள்ள மற்ற உயிர்களைப் போற்றி அருளுடையவனாக இருப்பவனுக்கு இல்லை.


## ரேசன் கடைகளின் பெயரை மாற்ற ஒன்றிய அரசு திட்டம்



டெல்லி, ஆக. 22

நியாயவிலை கடைகளுக்கு 'ஜன் போஷான் கேந்த்ராஸ்' என்று பெயர் மாற்ற ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது. நாடு முழுவதும் முதல்கட்டமாக சோதனை அடிப்படையில் 60 ரேசன் கடைகளின் பெயரை ஒன்றிய அரசு மாற்றுகிறது. குஜராத், ராஜஸ்தான், தெலுங்கானா, உத்தரப்பிரதேசத்தில் 60 ரேசன் கடைகளின் பெயரை சோதனை முயற்சியாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

## திருப்பதி ஏழுமலையான் கோயிலில் ஒரே நாளில் 35 பக்தர்களுக்கு போலி தரிசன டிக்கெட் கொடுத்து மோசடி



திருமலை, ஆக. 22

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் சுவாமி தரிசனம் செய்ய ஆந்திர சுற்றுலாத்துறைக்குவழங்கும்டிக்கெட்டுகளைதேதிமாற்றிகலர்ஜெராக்ஸ் எடுத்து அதனை விற்று மோசடி செய்வதாக விஜிலென்ஸ் போலீசாருக்கு தகவல் கிடைத்தது, விசாரணையில் ஆந்திர சுற்றுலாத்துறைக்கு வழங்கும் டிக்கெட்டுகளை தேதி மற்றும் பெயர்களை மாற்றி ஜெராக்ஸ் எடுத்து மோசடி நடந்தது தெரியவந்தது.

தேவஸ்தான முன்னாள் ஊழியர் அமிர்த யாதவ், ஆந்திர சுற்றுலா துறை முன்னாள் ஊழியர் பெரியசாமி ஆகியோர் கடந்த மாதம் 10ம்தேதி 35 பக்தர்களுக்கு போலி தரிசன டிக்கெட் கொடுத்து வைகுண்டம் கியூ காம்ப்ளக்ஸ் நுழைவுவாயில் வழியாக அழைத்துச்சென்று தேவஸ்தான டிக்கெட் சரிபார்க்கும் ஊழியர்களான நவீன், ருத்ரராஜ் ஆகியோர் உதவியுடன் சுவாமி தரிசனம் செய்ய அனுமதித்தது தெரிந்தது. இதற்காக ரூ.11 ஆயிரம் வீதம் 35 பக்தர்களிடம் பணம் மோசடி செய்தது தெரிந்தது. அவர்கள் 4 பேரை யும் போலீசார் கைது செய்தனர். மேலும் சென்னையை சேர்ந்த டிராவல்ஸ் ஏஜென்ட் பத்மா என்பவரை தேடிவருகின்றனர்.

## மாநிலங்களவை இடைத்தேர்தல் ஒன்றிய அமைச்சர்களுக்கு பா.ஜ.க.வில் வாய்ப்பு



புதுடெல்லி, ஆக. 22

மாநிலங்களவை இடைத்தேர்தலில்ஒன்றிய அமைச்சர்கள் ரவ்னீத்சிங் பிட்டு, ஜார்ஜ் குரியன் ஆகியோருக்கு பாஜ வாய்ப்பு அளித்துள்ளது. நாடு முழுவதும் 9 மாநிலங்களில் 12 மாநிலங்களவை எம்பி பதவிகள் காலியாக உள்ளன. இங்கு செப்.3ம் தேதி தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்து இருந்தது. அதை தொடர்ந்து பா.ஜ நேற்று 9 வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டது.

ராஜஸ்தானில் இருந்து ஒன்றிய அமைச்சர் ரவ்னீத்சிங் பிட்டு, மத்தியபிரதேசத்தில் இருந்து ஜார்ஜ் குரியன், ஒடிசாவில் இருந்து பிஜூஜனதா தளம் முன்னாள் தலைவர் மம்தா மொகந்தா,அரியானாவில் இருந்து காங்கிரஸ் முன்னாள் தலைவர் கிரண் சவுத்ரி ஆகியோர் பாஜ சார்பில் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும் பீகாரில் மனன் குமார் மிஸ்ராவும், மகாராஷ்டிராவில் இருந்து தைரியஷில் பாட்டீலும், திரிபுராவில் ராஜீப் பட்டாச்சார்ஜியும் போட்டியிடுகிறார்கள். அசாமில் மிஷன் ரஞ்சன் தாஸ், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ராமேஸ்வர் டெலி ஆகியோர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

# கிருஷ்ணகிரி விவகாரம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் அதிரடி உத்தரவு

சென்னை, ஆக. 22

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கிருஷ்ணகிரி மாவட்டம் கந்திக்குப்பம் பகுதியில் செயல்பட்டுவரும் தனியார் பள்ளியில், என்.சி.சி. திட்டத்திற்குமாணவர்களைதயார்ப்படுத்துவதற்கான முகாம் பள்ளி நிர்வாகத்தால் நடத்தப்பட்டது. இந்த முகாமில், போலியான பயிற்றுநர்கள் கலந்துகொண்டு. அங்கு பயிலும் பள்ளி மாணவிகள் சிலரை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக, பர்கூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கப்பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட என்.சி.சி. பயிற்றுநர்கள் ஆறு பேரில் ஐந்து பேரும், இந்த சம்பவத்தைக் காவல்துறைக்கு தெரிவிக்காமல் மறைத்த பள்ளியின் நிர்வாகத்தினர் நான்கு பேரும் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். மேலும், வழக்கின் முக்கிய எதிரி சிவராமனுக்கு அடைக்கலம் கொடுத்து போலீசாரின் கைது நடவடிக்கைக்கு எதிராக செயல்பட்ட இரு நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்கூறிய போலியான என்.சி.சி. பயிற்றுநர்கள் இதே போன்று. மேலும் சில பள்ளிகளிலும் கல்லூரிகளிலும், இத்தகைய பயிற்சி வகுப்புகளை மேற்கொண்டதாகத் தெரிய வந்துள்ளது. இந்தப் பள்ளிகள், கல்லூரிகளிலும் மேற்கூறிய பாலியல் அத்துமீறல்கள் நடந்துள்ளதா என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



இந்த சம்பவங்களைப் பற்றி முழுமையான விசாரணையை மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட அனைவரின் மீதும் நடவடிக்கைகளை எடுக்கும் வகையில், திருமதி பவானீஸ்வரி. இ.கா.பா., காவல்துறை தலைவர் தலைமையில், சிறப்பு புலனாய்வு குழு (SIT) ஒன்றை அமைத்திட முதல்அமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

மேலும், இந்த சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களோடு கலந்தாலோசித்து, அவர்களின் நலன் காத்திட தேவையான நடவடிக்கைகள் குறித்தும்,. இந்த சம்பவம் ஏற்படக் காரணமாக இருந்த சூழ்நிலைகள் குறித்து ஆராய்ந்து, இது போன்ற சம்பவங்கள் இனிமேல் நடைபெறாமல் தடுப்பது குறித்தும், உரிய பரிந்துரைகளை அளித்திட சமூகநலத்துறை செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன், தலைமையில் ஒரு பல்நோக்கு குழு (Multi Discopanary Team MDT) ஒன்றை அமைத்திடவும் ஆணையிட்டுள்ளார்கள். இக்குழுவில் மாநில சமூக பாதுகாப்பு ஆணையர் ஜானி டாம் வர்கீஸ் பள்ளிக்கல்வி இயக்குனர் லதா, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அரவிந்த், மனநல மருத்துவர்கள் திருமதி. பூர்ண சந்திரிகா மற்றும் சத்யா ராஜ், காவல்துறை ஆய்வாளர் திருமதி. லதா, குழந்தைகள் பாதுகாப்பு ஆர்வலர் வித்யா ரெட்டி ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள். மேற்கூறிய சம்பவம் குறித்த விசாரணையை துரிதமாக மேற்கொண்டு, 15 நாட்களுக்குள் அனைத்து நடவடிக்கைகளையும் முடிக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு முதல்அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், வழக்குகளின் விசாரணையை விரைந்து முடித்து 60 நாட்களுக்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து, குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி, கடும் தண்டனையை பெற்றுத்தர முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நாடெங்கும் நமது கொடி பறக்கும் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய்



சென்னை, ஆக. 22

நாளை முதல் நாடெங்கும் நமது கொடி பறக்கும். தமிழ்நாடு இனி சிறக்கும். வெற்றி நிச்சயம் என்று த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

நடிகர் விஜய் 'தமிழக வெற்றிக் கழகம்' என்ற புதிய கட்சியை தொடங்கியுள்ளார். கட்சி தொடங்கிய அறிவிப்பை கடந்த பிப்ரவரி மாதம் 2ம் தேதி விஜய் அதிகாரபூர்வமாக அறிவித்தார். வரும் 2026 தமிழக சட்டசபை தேர்தலில் போட்டியிடுவதாக விஜய் அறிவித்துள்ளார். இருப்பினும் கட்சியின் கொடி, சின்னம் அறிவிக்கப்படாமல் இருந்தது.

இந்நிலையில் தமிழக வெற்றிக் கழகதலைவர்விஜய் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

என் நெஞ்சில் குடியிருக்கும் தோழர்களே. சரித்திரத்தின் புதிய திசையாகவும்புதியவிசையாகவும் ஒவ்வொரு நாளும் அமைந்தால் அது ஒரு பெரும் வரம். அப்படியான வரமாக இறைவனும் இயற்கையும்நமக்குஅமைத்துக்கொடுத்திருக்கும் நாள்தான் 2024 ஆகஸ்ட் 22.

நம் தமிழக வெற்றிக் கழகத்தின் முக்கிய அடையாளமான கொடி அறிமுகமாகும் நாள். தமிழ்நாட்டின் நலனுக்காக உழைத்து, நம் மாநிலத்தின் அடையாளமாகவும் மாறப்போகும்நம்வீரக்கொடியை, வெற்றிக்கொடியை நாளை நம் தலைமை நிலையச் செயலகத்தில் அறிமுகப்படுத்தி, கழகக் கொடிப் பாடலை வெளியிட்டு, கழகக் கொடியை ஏற்றி வைக்கிறோம் என்பதைப் பெருமகிழ்வுடன் அறிவிக்கிறேன். நாளை முதல் நாடெங்கும் நமது கொடி பறக்கும். தமிழ்நாடு இனி சிறக்கும். வெற்றி நிச்சயம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை காலை 9.15 மணிக்கு பனையூரில் நடக்கும் கட்சி கொடி அறிமுகம் செய்யப்படும் விழாவில் தமிழகம் முழுவதிலும் இருந்து சுமார் 250 நிர்வாகிகள் பங்கேற்க உள்ள நிலையில், பாதுகாப்பு கோரி சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் மனு அளிக்கப்பட்டுள்ளது. விஜய் அறிமுகம் செய்யும் த.வெ.க. கொடியில் சமத்துவத்தை போற்றும் வகையில் லோகோ இடம்பெற உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. த.வெ.க. அறிக்கைகளில் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற வாசகம் இடம்பெற்றுள்ள நிலையில், அதை மையமாக வைத்து லோகோ தயாரிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இதனால் விஜய் கட்சி கொடியில் வெற்றியை குறிக்கும் வாகை மலர் இடம்பெறுமா? அல்லது சமத்துவத்தை குறிக்கும் லோகோ இடம்பெறுமா? என தொண்டர்கள், ரசிகர்கள் பெரும் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

## நெல்சன் மனைவி கொடுத்த ரூ.75 லட்சம்: ஆம்ஸ்ட்ராங் கொலைக்கு பயன்படுத்தப்பட்டதா? வெளியான பகீர் தகவல்

சென்னை, ஆக. 22

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் கடந்த மாதம் 5ம் தேதி படுகொலை செய்யப்பட்டார். இந்த கொலையில் தொடர்புடையவர்களை பிடிக்க போலீசார் தனிப்படை அமைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஆற்காடு சுரேஷின் தம்பியான பொன்னை பாலு, பெண் தாதா மலர்கொடி, கஞ்சா விற்பனை செய்த அஞ்சலை, ஹரிதரன், இது போன்றவர்கள் மட்டுமல்லாது அ.தி.மு.க., தி.மு.க., பா.ஜ.க., த.மா.கா, காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சி நிர்வாகிகளுக்கும் இந்த கொலை சம்பவத்தில் தொடர்பு இருப்பதாக தகவல் வெளியாகியிருந்தது. கொலை சம்பவம் தொடர்பாக 20க்கும் மேற்பட்டோரை போலீசார் கைது செய்துள்ளனர். மேலும் இந்த கொலையில் தொடர்புடைய அனைவரையும் பிடிக்க போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதையடுத்து ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் தேடப்படும் ரவுடி சம்போ செந்திலின் கூட்டாளி மொட்டை கிருஷ்ணன். இவர் குடும்பத்துடன் வெளிநாடு தப்பிச் சென்றுள்ளார். இந்நிலையில், மொட்டை கிருஷ்ணன் தற்போது சவுதி அரேபியாவில் உள்ள அவரது நண்பர் வீட்டில் தங்கியிருப்பதாக தகவல் வெளியான நிலையில், இண்டர்போல் மூலம் பிடிக்க தமிழக போலீசார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கிடையே மொட்டை கிருஷ்ணன் சிங்கப்பூரில் 10 நாட்கள் தங்கி இருந்ததாக தகவல் வெளியாகி இருந்தது. இதனால் அவரை பிடிக்க நேற்று லுக் அவுட் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது. மேலும் மொட்டை கிருஷ்ணனுடன் செல்போனில் உரையாடியதாக பிரபல இயக்குநர் நெல்சனின் மனைவியிடம் போலீசார் விசாரணை நடத்தி இருந்தது.



இந்நிலையில், நெல்சன் மனைவியின் வங்கி கணக்கில் இருந்து ரூ.75 லட்சம் தலைமறைவாக உள்ள வழக்கறிஞர் மொட்டை கிருஷ்ணனின் வங்கி கணக்கிற்கு சென்றிருப்பதை போலீசார் கண்டுபிடித்துள்ளனர். மேலும், மொட்டை கிருஷ்ணன், நெல்சனின் மனைவி மோனிஷா ஆகியோர் சென்னை எம்.ஆர்.சி. நகரில் உள்ள நட்சத்திர ஓட்டலில் சந்தித்து உள்ளதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து. எதற்காக 75 லட்சத்தை மொட்டை கிருஷ்ணனுக்கு அனுப்பினார் என்பது குறித்து மோனிஷாவிடம் தனிப்படை போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது வழக்கு தொடர்பாகவும் நண்பர் என்ற முறையிலும் பணம் அனுப்பியதாக மோனிஷா பதில் கூறியதாக சொல்லப்படுகிறது. இதனையடுத்து, மோனிஷா அளித்த தகவல்கள் உண்மைதானா என்ற கோணத்திலும் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக நெல்சனின் மனைவி மோனிஷா கொடுத்த ரூ. 75 லட்சம், ஆம்ஸ்ட்ராங் கொலைக்கு பயன்படுத்தப்பட்டதா? என்ற கோணத்தில் போலீசார் விசாரணையை முடக்கி விட்டுள்ளனர்.

# 300 நிர்வாகிகளுக்கு விஜய் அழைப்பு

சென்னை, ஆக 22

நடிகர் விஜய் தொடங்கி உள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் அரசியல் வேகம் நாளுக்கு நாள் தீவிரம் அடைந்து வருகிறது. வருகிற 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலை மையமாக கொண்டு கட்சி பணிகள் நடந்து வருகிறது.

இதைத் தொடர்ந்து கட்சியின் கட்டமைப்பை பலப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் அரசியல் மாநாடு அடுத்த மாதம் 22ந்தேதி விக்கிரவாண்டியில் நடைபெற இருக்கிறது.

மாநாட்டில் 10 லட்சம் பேர் பங்கேற்க இருப்பதால் அதற்கேற்றவாறு மாநாடு பந்தல் அமைக்கப்பட இருக்கிறது. மாநாடு நடைபெறும் இடத்தை விஜய் ஆலோசனையின் பேரில் பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

மாநாட்டில் பங்கேற்க வரும் தொண்டர்களின் வாகனங்கள் நிறுத்துவதற்கு வசதியாக பல ஏக்கரில் பார்க்கிங் வசதி, உணவுக் கூடம் அமைக்கப்பட இருக்கிறது.

மாநாட்டில் தொண்டர்கள் எடுத்து வருவதற்கு வசதியாக கட்சியின் புதிய கொடியை வருகிற 22ந் தேதி சென்னையில் விஜய் அறிமுகப்படுத்துகிறார்.

இதற்காக பனையூரில் உள்ள கட்சி தலைமை அலுவலகம் முன்பு 40 அடி உயரத்தில் கொடிக் கம்பம் நிறுவப்பட்டுள்ளது. நேற்று பவுர்ணமி என்பதால் கொடி கம்பத்தில் 'மாதிரி' கொடியை ஏற்றி ஒத்திகை பார்த்தனர். கொடி ஏற்றுவதை கட்சி தலைவர் விஜய், பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் ஆகியோர் பார்வையிட்டனர். 22ந்தேதி கட்சியின் அறிமுக விழா நடைபெறுவதை தொடர்ந்து விழாவுக்கு 300க்கும் மேற்பட்ட நிர்வாகிகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கெனதலைமை அலுவலகத்தில் சிறப்பு பந்தல் போடப்பட்டு வருகிறது.



நிர்வாகிகள் முன்னிலையில் சிவப்பு, மஞ்சள் நிறத்துடன் வெற்றியை குறிக்கும் வாகைப்பூ நடுவில் இடம் பெற்றிருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட கட்சி கொடியை அறிமுகம் செய்வதுடன் கொடிக் கம்பத்திலும் விஜய் கொடி ஏற்றி வைக்கிறார்.

தொடர்ந்து தமிழகம் முழுவதும்உள்ளமாவட்ட நிர்வாகிகளுக்கு கட்சி கொடி வழங்கப்படுகிறது. கட்சிக் கொடி கிளை, நகரம், ஒன்றியம், மாநகரம் வாரியாக ஏராளமான இடங்களில் மாநாட்டுக்கு முன்பாக ஏற்றப்படுகிறது.

இதைத் தொடர்ந்து மாநாட்டு பணிகள் தொடங்க இருக்கிறது. மைதானம் சீரமைப்பு, பந்தல், உணவு காண்டிராக்டர் மற்றும் பல்வேறு முன் ஏற்பாடுகளும் படிப்படியாக தொடங்கப்பட்டு நடக்க இருக்கிறது.

கட்சிக் கொடி அறிமுகம், மாநாடு என தமிழக வெற்றிக் கழகத்தின் பணிகள் தொண்டர்களுக்கு புதியவேகத்தைகொடுத்து உள்ளது.

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பாஜக பக்கம் போகமாட்டார் செல்வப்பெருந்தகை

சென்னை, ஆக. 22

மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 80 வது பிறந்த நாளை காங்கிரசார் இன்று கொண்டாடினார்கள். இதையொட்டி சட்டமன்ற காங்கிரஸ் கட்சி தலைவர் ராஜேஷ்குமார்எம்.எல்.ஏ. முன்னிலையில் சின்னமலையில் நடந்த நிகழ்ச்சியில் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை ராஜீவ் சிலைக்கு மாலை அணிவித்தார்.

அதைத் தொடர்ந்து சத்தியமூர்த்திபவனில்ராஜீவ் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் இலவச மருத்துவ முகாமையும் தொடங்கி வைத்தார்.

செல்வப்பெருந்தகை நிருபர்களிடம் கூறியதாவது:

மதவாதத்துக்கு எதிராகவும் சமூக நீதிக்காகவும் தன் வாழ்நாளெல்லாம் குரல் கொடுத்தவர் கலைஞர். அவருக்கு நாணயம் வெளியிட்டது சிறப்பு. அதே நேரம் அரசு சார்பில் நடந்த இந்த விழாவில் அரசியல் கலப்பது சரியல்ல. இதை காரணமாக வைத்து பா.ஜகவுடன் தி.மு.க. கூட்டணி அமைக்கும் என்று ஹேஸ்யமாக சொல்வது தவறு. எங்கள் கூட்டணி உறவு கெட்டியாக உள்ளது.

மதவாதத்தை எதிர்ப்பதில் காங்கிரஸ் எந்த அளவு தீவிரமாக உள்ளதோ அதே அளவுக்குதீவிரமாக இருப்பவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். எனவே அவர் அந்த பக்கம் போகமாட்டார். முத்தமிழறிஞர் கலைஞரை பற்றி தேர்தல் நேரத்திலும் தேர்தலுக்கு முன்பும் பாஜகவினர் எவ்வளவு வசைபாடினார்களோ அதையும் திரும்ப பெற வேண்டும்.



ஒன்றிய அரசு தமிழக ரெயில்வே திட்டங்களுக்கு ஆயிரம் ரூபாய் மட்டும் நிதி ஒதுக்கி உள்ளது. டீ செலவுக்குக் கூட போதாத இந்த தொகையால் தமிழகத்தில் எந்த ரெயில்வே திட்டத்துக்கும் பலனில்லை. எனவே மத்திய அரசு அறிவித்த ஆயிரம் ரூபாயுடன் ரூ.1 கூடுதலாக சேர்த்து ரூ.1001ஐ மத்திய அரசுக்கு திருப்பி அனுப்பும் போராட்டத்தை காங்கிரஸ் நடத்தும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட தலைவர்கள்தலைமையில் நடத்தப்படும் இந்த போராட்டத்துக்கான தேதி விரைவில் அறிவிக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் மாநில தலைவர்கள் தங்கபாலு, திருநாவுக்கரசர், கிருஷ்ணசாமி, மாநில துணைதலைவர் சொர்ணா சேதுராமன், விஜய் வசந்த் எம்.பி. மாநில நிர்வாகிகள் டி.செல்வம், தணிகாசலம், தளபதி பாஸ்கர், மாவட்ட தலைவர் முத்தழகன், தி.நகர் ஸ்ரீராம், இல.பாஸ்கரன், திருவான்மியூர் மனோகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# விவசாய சங்க தலைவர் அய்யாக்கண்ணு வீட்டில் சிறை வைப்பு

திருச்சி, ஆக. 22

விவசாய விளைபொருட்களுக்கு லாபகரமான விலை வழங்க வேண்டும், விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும், காவிரியில் மாதந்தோறும் தண்ணீர் திறந்து விட உச்சநீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தினர் நாளை டெல்லியில் போராட்டம் நடத்த திட்டமிட்டனர்.

இதற்காக விமானம் மூலம் டெல்லி செல்ல அந்த சங்கத்தின் தலைவர் அய்யாக்கண்ணு உள்ளிட்ட விவசாயிகள் ஆயத்தம் ஆகினர்.

இது பற்றி தகவல் அறிந்த மாநகர போலீசார் அதிகாலை 3 மணியளவில் திருச்சி அண்ணாமலை நகரில் உள்ள அய்யாக்கண்ணு வீடு முன்பு போலீஸ் குவிக்கப்பட்டனர்.

பின்னர் அய்யாக்கண்ணு, துணைத் தலைவர் மேகராஜன் உள்ளிட்ட விவசாயிகள் வெளியில் செல்ல முடியாதபடி தடுத்து வீட்டில் சிறை வைத்தனர்.



இது பற்றி அய்யாக்கண்ணு கூறும்போது, ஜனநாயகத்தில் போராடும் உரிமை அனைவருக்கும் உள்ளது. அதை தமிழக காவல்துறையினர் தொடர்ந்து தடுத்து நிறுத்தி வருவது வன்மையாக கண்டிக்கத்தக்கது என்றார்.

# தி.மு.க. அரசு ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக பாடுபடக்கூடிய அரசு: கனிமொழி

நெல்லை, ஆக. 22

நெல்லையில் சுதந்திர போராட்ட வீரர் ஒண்டிவீரன் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின் கனிமொழி எம்.பி. நிருபர்களிடம் கூறியதாவது:

சுதந்திர போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்த மாவீரன் ஒண்டிவீரன் மணிமண்டபத்தில் அவருக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் வாய்ப்பை பெற்றதில் மகிழ்ச்சி அடைகிறேன். கருணாநிதி முதலமைச்சராக இருந்த போது தான் ஒண்டிவீரனுக்கு மணி மண்டபம் கட்டப்பட்டது. தி.மு.க. ஆட்சியில் தான் அருந்தியருக்கு 3 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. அதை எதிர்த்து சிலர் வழக்கு போட்டனர்.

இப்போது அதை எதிர்த்து நமது முதலமைச்சர் பெரிய வெற்றியை கண்டிருக்கிறார். தி.மு.க. அரசு ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, விளிம்பு நிலை மக்களுக்காக உழைக்க கூடிய அரசு. வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் என்ற பாரபட்சம் இல்லாமல் அனைவருக்காகவும் உழைக்கக்கூடிய அரசு. ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக பாடுபடக்கூடிய அரசு.



தி.மு.க.வும், பா.ஜ.க.வும் ரகசிய கூட்டணி வைத்திருக்கிறது என எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டி உள்ளார். தி.மு.க. தொடர்ந்து நம் உரிமைகளுக்காக போராடி கொண்டிருக்கிறது. அனைவருக்கும் கல்வி திட்டம், மெட்ரோ ரெயில் திட்டம் போன்றவற்றிற்கு ஒன்றிய அரசு நிதி வழங்கவில்லை.

சென்னை மற்றும் தென் மாவட்டங்களில் மழையால் பாதிக்கப்பட்ட போது நிவாரணம் கேட்டு இதுவரை தரவில்லை. இதன்பிறகு அவர்களுடன் என்ன நெருக்கம் இருக்கிறது? முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மக்களோடும், மனிதர்களோடும் எளிமையாக, இனிமையாகபழகக்கூடியவர். எனினும் உரிமை என்று வருகிற போது கருணாநிதி போன்று உறுதியாக இருக்கக் கூடியவர்.

இவ்வாறு அவர் கூறினார்

# ஜெய்ப்பூரில் இருந்து ஓட்டல்களுக்கு ரெயிலில் வந்த 1½ டன் ஆட்டு இறைச்சி பறிமுதல்

சென்னை, ஆக. 22

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் இருந்து சென்னை எழும்பூருக்கு இன்று எக்ஸ்பிரஸ் ரெயில் வந்தது.

அதில் பார்சல் பெட்டியில் ஆட்டு இறைச்சி கொண்டு வரப்படுவதாக உணவு பாதுகாப்பு துறை அலுவலகங்களுக்கு தகவல் கிடைத்தது. அதனை தொடர்ந்து அதிகாரி சதீஷ் குமார் தலைமையில் வந்த குழுவினர் அந்த ரெயிலில் இருந்த இறைச்சியினை பரிசோதனை செய்தனர்.



அப்போது முறையாக பதப்படுத்தாமல், சுகாதார மற்ற முறையில் ஆட்டு இறைச்சி இருந்ததை அதிகாரிகள் கண்டு பிடித்தனர்.

3 நாட்களுக்கு முன்பு வெட்டப்பட்ட ஆட்டு இறைச்சியை சென்னைக்கு கொண்டு வந்து ஓட்டல்களில் சப்ளை செய்ய இருந்தது தெரிய வந்தது.

இதைத்தொடர்ந்து 1½ டன் ஆட்டு இறைச்சியை பறிமுதல் செய்து மாநகராட்சி கால்நடை துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

இறைச்சியை பறிமுதல் செய்த அதிகாரிகள் கெட்டுப்போன அந்த இறைச்சியை பரிசோதனை செய்த பிறகு தான் அதன் தன்மை தெரிய வரும் என்று தெரிவித்தனர்.

# `டெட்' தேர்வு அறிவிப்பு எப்போது? ஆசிரியர்கள் எதிர்பார்ப்பு

சென்னை, ஆக. 22

மத்திய அரசின் இலவச கட்டாயக் கல்வி உரிமை சட்டத்தின் படி, 1 முதல் 8ம் வகுப்பு வரை பணியாற்றும் இடைநிலை ஆசிரியர்களும், பட்டதாரி ஆசிரியர்களும் 'டெட்' எனப்படும் ஆசிரியர் தகுதித் தேர்வில் கட்டாயம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தேசிய ஆசிரியர் கல்வி கவுன்சில் (என்சிடிஇ) விதி முறைகளின் படி, ஆண்டுக்கு 2 தடவை 'டெட்' தேர்வு நடத்தப்பட வேண்டும். தமிழ்நாட்டில் இந்தத் தேர்வை ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தி வருகிறது.

2024ம் ஆண்டு 'டெட்' தேர்வுக்கான அறிவிப்பு ஏப்ரலில் வெளியிடப்பட்டு ஜூலையில் தேர்வு நடத்தப்படும் என ஆசிரியர்தேர்வு வாரியம் தேர்வுகால அட்டவணையில் அறிவித்திருந்தது. இந்நிலையில், ஏப்ரல் மாதம் முடிவடைந்து உள்ள நிலையில் 'டெட்' தேர்வு குறித்த அறிவிப்பை ஆசிரியர்தேர்வு வாரியம் இன்னும் வெளியிடவில்லை. இதனால், 'டெட்' தேர்வை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் பி.எட். பட்டதாரிகளும், இடைநிலை ஆசிரியர் பயிற்சியை முடித்தவர்களும் ஏமாற்றத்துக்கு உள்ளாகியுள்ளனர். இது குறித்து ஆசிரியர்கள் கூறும்போது, சிடெட் எனப்படும் மத்திய ஆசிரியர் தகுதித்தேர்வு என்சிடிஇ விதிமுறையைப் பின்பற்றி ஆண்டுக்கு 2 தடவை நடத்தப்படுகிறது. அதேபோல், ஆசிரியர் தேர்வு வாரியமும் ஆண்டுக்கு 2 தடவை 'டெட்' தேர்வை நடத்த வேண்டும். இப்போது தனியார் சுயநிதி பள்ளிகளில் கூட 'டெட்' தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களைத் தான் பணிக்கு தேர்வு செய்கிறார்கள். அரசு பள்ளி பட்டதாரி ஆசிரியர் இடைநிலை ஆசிரியர் பதவிக்கான போட்டித் தேர்வை எழுத 'டெட்' தேர்ச்சி அவசியம். எனவே, ஆசிரியர் தேர்வு வாரியம் 'டெட்' தேர்வுக்கான அறிவிப்பை உடனடியாக வெளியிட்டு விரைந்து தேர்வு நடத்தி முடிவுகளை வெளியிட வேண்டும் என்றனர். இதுகுறித்து பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் கூறுகையில், ஆசிரியர் தகுதித் தேர்வை நடத்துவது குறித்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைத்ததும் தேர்வுக்கான தேதிகள் அறிவிக்கப்படும் என அவர்கள் தெரிவித்தனர்.

# ரேஷன் கடைகளில் தேங்காய் எண்ணெய்: பொதுமக்களிடம் தமிழக அரசு கருத்து கேட்பு

சென்னை, ஆக. 22

ரேஷன் கடைகள் மூலம் தேங்காய் எண்ணெயை வழங்கலாமா? என்பது பற்றி பொதுமக்களிடம் அரசு கருத்து கேட்டு வருகிறது.

கோவை, திருப்பூர் மற்றும் பொள்ளாச்சியை சேர்ந்த தென்னை விவசாயிகள் தேங்காய் மற்றும் கொப்பறை தேங்காய்க்கு உரிய விலை கிடைக்கவில்லை என்று ஆதங்கப்பட்டு வருகின்றனர்.

தங்களுக்கு நியாயமான விலையை உறுதி செய்ய ரேஷன் கடைகளில் தேங்காய் எண்ணெயை விற்பனை செய்ய வேண்டும் என்று மாநில அரசிடம் கோரிக்கை வைத்து வருகின்றனர்.

இதைத் தொடர்ந்து தமிழக அரசு அட்டைதாரர்களின் கருத்தை அறியுமாறு ரேஷன் கடை மேற்பார்வையாளர்களுக்கு அறிவுறுத்தி உள்ளது.





இதற்கான கருத்துக்களை பதிவு செய்ய படிவங்களும் வழங்கப்பட்டுள்ளன. இந்த மாதம் இறுதி வரை பொது மக்களின் விருப்பத்தை கேட்டறிந்து அதன் விவரங்களை மாவட்ட நிர்வாகங்கள் அறிக்கையாக தொகுத்து அரசுக்கு அனுப்ப உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

1 லிட்டர் பாமாயில் எண்ணைக்கு பதில் 1 லிட்டர் தேங்காய் எண்ணெய் வழங்குவது பற்றி முதற்கட்டமாக கன்னியாகுமரி, தென்காசி, திருநெல்வேலி, கோவை, திருப்பூர் மாவட்டங்களில் வசிக்கும் சிலர் தேங்காய் எண்ணெயை சமையலுக்கு அதிகம் பயன்படுத்துவதால் எத்தனை கார்டு தாரர்கள் இதற்கு மாறுவதற்கு ஆர்வமாக உள்ளனர் என்பதை அறிய கலெக்டர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுபற்றி சிவில் சப்ளை அதிகாரி கூறுகையில் கேரள மாநில எல்லையோர மாவட்டங்களில் வசிக்கும் சிலர் தேங்காய் எண்ணெயை சமையலுக்கு அதிகம் பயன்படுத்துவதால் இந்த கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.

ஆனாலும் இதுகுறித்த கொள்கை முடிவை அரசு தான் எடுக்க வேண்டும். மாவட்ட கலெக்டர்களின் ஆய்வறிக்கைகள் கிடைத்த பிறகு அரசு இதில் இறுதி முடிவை அறிவிக்கும் என்று தெரிவித்தார்.

# இணை செயலாளர்களை நேரடியாக நியமிப்பது சமூகநீதிக்கு எதிரானது: ராமதாஸ்

சென்னை, ஆக. 22

பா.ம.க.நிறுவனர் டாக்டர் ராமதாஸ் தனது டுவிட்டர்பக்கத்தில் வெளியிட்டு உள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

மத்திய அரசு நிர்வாகத்தில் இணை செயலாளர்கள், இயக்குனர்கள் உள்ளிட்ட பல்வேறு நிலையிலான 45 அதிகாரிகளை நேரடியாக நியமனம் செய்வதற்கான விளம்பர அறிவிப்பை மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ளது.



இது சமூக நீதிக்கு எதிரானது. இந்த முறையில் செய்யப்படும் நியமனம் வெளிப்படையாக இருக்காது. எனவே, மத்திய அரசின் பல்வேறு துறைகளில் இணைச் செயலாளர், இயக்குனர்கள் உள்ளிட்ட நிலைகளில் தனியார் நிறுவன அதிகாரிகளை நேரடியாக நியமிக்கும் முடிவை மத்திய அரசு கைவிட வேண்டும். மாறாக, குடிமைப்பணிகளுக்கான அனைத்துநியமனங்களும் இட ஒதுக்கீட்டு முறையை பின்பற்றி செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# வலைத்தள வாசிகளின் சேட்டை: மனநலம் பாதித்தவரை குரங்கு போல் மாறியதாக திசை திருப்பி விட்டனர்

சிவகங்கை, ஆக. 22

வலைத்தள வாசிகளின் சேட்டை சில நேரங்களில் எல்லை மீறி செல்வதும் தொல்லை கொடுப்பதாக மாறுவதும் உண்டு.

ஆனால் ஒரு உண்மையை பொய்யாக்கி திசை திருப்பும் மோசமான செயல்களில் ஈடுபடுவதுதான் சிலருக்கு வாடிக்கையாகி விட்டது. அது எவ்வளவு பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை அவர்கள் உணர்வதில்லை.

கடந்த 2 நாட்களாக சிவகங்கை பகுதியில் ஒருவரை குரங்கு கடித்ததால் அவர் குரங்கு போலவே மாறி விட்டார். குரங்கு போல் முகத்தை வைத்து கொண்டு கிரில் கதவுகளில் தாவுகிறார். அருகே செல்பவர்களை பார்த்து உருமுகிறார் என்றெல்லாம் வீடியோ பதிவுடன் பரப்புகிறார்கள். அதை யார் பார்த்தாலும் நம்பத்தான் செய்வார்கள்.



ஆனால் உண்மை அது வல்ல. இது தொடர்பாக சிவகங்கை மாவட்டத்தில் விசாரித்த போது கிடைத்த தகவல் அதிர்ச்சி அடைய வைத்தது.

காளையார்கோவிலை சேர்ந்தவர் சரவணன். மனநல சிகிச்சை பெற்று வரும் இவர் காளையார்கோவில் அரசு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

நோய் முற்றிய நிலையில் அவரை காளையார் கோவில் அரசு மருத்துவ மனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றுள்ளார்கள். அங்கு டாக்டர்கள் இல்லாததால் 108 ஆம்புலன்ஸ் மூலம் மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றுள்ளார்கள். ஆம்புலன்சில் இருந்து இறங்க மறுத்த சரவணன் அங்கிருந்த கிரில் கதவில் தாவி குதித்து ஏறியிருக்கிறார். அருகில் நெருங்கியவர்களை விரட்டியிருக்கிறார்.

இதனால் நோயாளிகளும், உறவினர்களும் பயந்து ஓடியிருக்கிறார்கள். பின்னர் பாதுகாவலர்கள் சூழ்ந்து அவரை பிடித்து கைகளை பின்னால் கட்டி சிகிச்சைக்கு அழைத்து சென்றுள்ளார்கள். இந்த சம்பவத்தை வீடியோ பதிவு செய்தவர் சமூக வலைதளத்தளங்களில் திசை திருப்பி விட்டிருக்கிறார். இதை பார்த்து உறவினர்கள் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தார்கள்.

இப்போது நெட்டிசன்கள்பலர்அடப்பாவிகளா? இப்படியெல்லாமா பண்வீங்க? என்று பதிலுக்கு பதிவிட்டு வறுத்து எடுக்கிறார்கள்.

# இயந்திரத்தில் முடி சிக்கி தலை துண்டாகி பெண் பலி

திருவள்ளூர், ஆக. 22

திருவள்ளூர் ஆவின் தொழிற்சாலையில் இயந்திரத்தில் முடி சிக்கியதால் தலை துண்டாகி உமா மகேஸ்வரி என்பவர் உயிரிழந்தார். உமாமகேஸ்வரியின் முடி இயந்திரம் அருகில் இருந்த மோட்டாரின் கன்வேயர் பெல்ட்டில் சிக்கியது. மோட்டாரில் முடி சிக்கிக்கொண்டதில்தலை



துண்டாகி சம்பவ இடத்திலேயே உமா மகேஸ்வரி உயிரிழந்தார். பெண் உயிரிழந்தது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சம்பவத்தைத் தொடர்ந்து காக்களூர் ஆவின் பால் பண்ணையில் பால் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தப்படுத்து.

# கூலி பெறாமல் கட்டிட மராமத்து பணி: மகனை படிப்பால் உயர்த்திய அரசு பள்ளிக்கு தந்தை சேவை

உசிலம்பட்டி, ஆக. 22

உசிலம்பட்டி அருகே மகமதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகே எழுமலையில் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இங்கு கட்டிட மராமத்து வேலைகளை பார்க்க இப்பள்ளியில் படித்த மாணவனின் தந்தையும், உத்தப்புரத்தை சேர்ந்த கட்டிட பணியாளருமான அழகு முருகனிடம் தலைமை ஆசிரியர்தனபால்கூறியுள்ளார். மூன்று நாட்கள் பள்ளியில் உள்ள அனைத்து மராமத்து வேலைகளையும் பார்த்து முடித்த அழகு முருகன், 'எனக்கு கூலி வேண்டாம்.

இந்த பள்ளிக்காக இலவசமாக செய்கிறேன்' என கூறியுள்ளார். தலைமையாசிரியர், வேலைக்கான கூலியை பெற்று கொள்ளுங்கள் என கட்டாயப்படுத்தியபோது அழகுமுருகன், 'இப்பள்ளி என் மகனுக்கு எவ்வளவோ



செய்து உள்ளது. இப்பள்ளிக்கு என்னால் முடிந்த உதவியாக இது இருக்கட்டும்' எனக் கூறி மீண்டும் பணத்தை வாங்க மறுத்து விட்டார்.

இதுகுறித்து அழகுமுருகன் கூறுகையில், ''என் மகன் பீமன் இப்பள்ளியில் கடந்தாண்டு பிளஸ் 2 படித்து விட்டு தற்போது திண்டுக்கல் காந்திகிராம பல்கலைக்கழகத்தில் பிஏ படிக்கிறார். எனது மகனின் கல்வி வளர்ச்சிக்கு உதவிய பள்ளிக்கு ஏதோவொரு வகையில் உதவி செய்ய வேண்டும் என எண்ணினேன். அதனால் கூலி வாங்காமல் வேலை பார்த்தது மனதுக்கு மகிழ்ச்சியாக உள்ளது'' என்றார்.

# தேவையில்லாமல் குண்டர் சட்டம்; இழப்பீடு வழங்க உத்தரவிடலாமா? தமிழக அரசுக்கு ஐகோர்ட்டு கேள்வி

சென்னை, ஆக. 22

குண்டர் சட்டத்தில் கைது செய்யப்படும் உத்தரவுகளை ரத்து செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை சென்னை ஐகோர்ட்டு நீதிபதி எஸ்.எம். சுப்ரமணியம், நீதிபதி வி. சிவஞானம் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த வழக்கு தொடர்பான விசாரணையின்போது, குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கு இடைக்கால ஜாமின் வழங்கலாமா? என கேள்வி எழுப்பிய நீதிபதிகள் இது குறித்து அரசு குற்றவியல் தலைமை வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா பதிலளிக்குமாறு அறிவுறுத்தியிருந்தனர்.



இதன்படி இன்றுகோர்ட்டில் ஆஜராகி விளக்கமளித்த அசன் முகமது ஜின்னா, இடைக்கால ஜாமின் வழங்க கோர்ட்டுக்கு அதிகாரம் உள்ளதாகவும், ஆனால் ஒவ்வொரு வழக்கிற்கும் இது மாறுபடும் எனவும் கூறினார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், தேவையில்லாமல் குண்டர் சட்டம் பயன்படுத்தப்படுவதாகவும், தேவையில்லாமல் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்படும் நபர்களுக்கு இழப்பீடு வழங்க உத்தரவிடலாமா? எனவும் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அசன் முகமது ஜின்னா, அவ்வாறு எதுவும் உத்தரவு பிறப்பிக்க வேண்டாம் எனகோரிக்கை விடுத்தார். மேலும், தேவையில்லாமல் குண்டர் சட்டத்தை பயன்படுத்தக்கூடாது என டி.ஜி.பி.க்கு ஏற்கனவே கடிதம் எழுதியுள்ளதாகவும், தற்போது குண்டர் சட்டத்தில் கைது செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதையடுத்து, குண்டர் சட்டத்தில் அடைப்பதற்கு பதிலாக மாற்று வழிகள் குறித்து ஆராய வேண்டும் என தலைமை குற்றவியல் வழக்கறிஞருக்கு அறிவுறுத்திய நீதிபதிகள், பொதுமக்கள் அச்சமின்றி காவல் நிலையத்தை அணுகும் சூழலை உருவாக்க வேண்டும் என தெரிவித்தனர்.

# ஈரோடு அருகே கல்குவாரியில் பயங்கர வெடி விபத்து: 2 பேர் உயிரிழப்பு



ஈரோடு, ஆக. 22

ஈரோடு மாவட்டம் கோபி அருகே கல்குவாரியில்பயங்கரவெடிவிபத்து ஏற்பட்டது.

இந்த வெடி விபத்தில் தொழிலாளர்கள் 2 பேர் உயிரிழந்தனர். டி.என். பாளையத்தில் உள்ள கல்குவாரியில் ஏற்பட்ட வெடி விபத்து குறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். கல்குவாரி விபத்தில் இடிபாடுகளில் சிக்கிய மேலும் பலரை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

# ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு: மொட்டை கிருஷ்ணனுக்கு எதிராக லுக் அவுட் நோட்டீஸ்

சென்னை, ஆக. 22

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் தலைமறைவாக உள்ள வழக்கறிஞர் மொட்டை கிருஷ்ணனுக்கு எதிராக சென்னை போலீசார் லுக் அவுட் நோட்டீஸ் பிறப்பித்துள்ளனர். தாய்லாந்திற்கு தப்பி சென்று இருப்பதாக தகவல் வெளியான நிலையில் சென்னை காவல்துறை லுக் அவுட் நோட்டீஸ் பிறப்பித்து



ள்ளது. சம்போ செந்திலின் கூட்டாளியான வழக்கறிஞர் மொட்டை கிருஷ்ணன் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் பண உதவி செய்திருப்பது தெரிய வந்தது. மொட்டை கிருஷ்ணனுடன் செல்போனில் உரையாடியதாக பிரபல இயக்குனர் நெல்சனின் மனைவியிடம் போலீசார் விசாரணை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

# வேளாங்கண்ணி திருவிழாவை முன்னிட்டு சிறப்பு பஸ்கள் அறிவிப்பு



சென்னை, ஆக. 22

வேளாங்கண்ணி மாதா திருவிழாவை முன்னிட்டு போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் உத்தரவின் பேரில் 1,050 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன. இதுதொடர்பாக அரசு விரைவு போக்குவரத்து கழகத்தின் மேலாண்மை இயக்குனர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

வேளாங்கண்ணி புனித அன்னை ஆரோக்கிய மாதா ஆலயத் திருவிழாவை முன்னிட்டு பக்தர்களின் வசதிக்காக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக சென்னை, பெங்களூரு, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் நாகர்கோவில் ஆகிய ஊர்களிலிருந்தும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலமாக திருச்சி, தஞ்சாவூர், சிதம்பரம், புதுச்சேரி, திண்டுக்கல், மணப்பாறை, ஒரியூர் மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய ஊர்களிலிருந்தும் வேளாங்கண்ணிக்கு மொத்தம் 1,050 சிறப்பு பஸ்கள் வருகிற 27ந்தேதி முதல் செப்டம்பர் மாதம் 10ந்தேதி வரையில் இயக்கப்பட உள்ளது.

*www.tnstc.in*மற்றும் *tnstc official app* செயலி மூலம் முன்பதிவு செய்து வேளாங்கண்ணி செல்லவும் மற்றும் அங்கிருந்து பயணிகள்திரும்பும்வகையில் பயணம் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கோவிலின் பூட்டை உடைத்து நகை, பணம் கொள்ளையடிக்க முயற்சி: வாலிபர் கைது

மத்தூர், ஆக. 22

மத்தூர் அருகே உள்ள அத்திபள்ளம் பகுதியில் பாம்பாறு ஆற்றங்கரையோரம் திருவண்ணாமலைபெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் பிரசித்தி பெற்ற முருகன் கோவில் அமைந்துள்ளது.

இந்த முருகன் கோவிலில் ஆடி 1ந் தேதி திருவிழா நடைபெற்றது. இதைத்தொடர்ந்து ஆடி கிருத்திகை, ஆடி அமாவாசை உள்ளிட்ட சிறப்பு நாட்களில் முருகப்பெருமானுக்கு சிறப்பு பூஜை நடைபெற்றது. இந்த நிலையில் கோவிலில் இருந்த உண்டியல் காணிக்கை எண்ணப்படாமல் இருந்தது. வழக்கம் போல் நேற்று இரவு பூசாரி கோவிலை பூட்டி விட்டு வீட்டிற்கு சென்று



விட்டார்.

அப்போது அங்கு வந்த மர்மநபர்கள் 4 பேர் கோவிலின் உண்டியலை உடைத்து பணம் திருட முயன்றனர். அப்போது கோவிலுக்குள் சத்தம் வரவே அக்கம்பக்கத்தினர் ஓடிவந்த பார்த்தபோது, மர்ம நபர் 4 பேர் பணம் திருடியது தெரியவந்தது. உடனே அவர்களை சுற்றி வளைத்து பிடிக்க முயன்றனர். இதில் ஒருவர் மட்டும் சிக்கி கொண்டார். மற்ற 3 பேர் அங்கிருந்து தப்பி ஓடி விட்டனர்

இந்த சம்பவம் குறித்து அப்பகுதி பொதுமக்கள் மத்தூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.

அப்போது பிடிப்பட்ட நபரை பொதுமக்கள் போலீசாரிடம் ஒப்படைத்தனர். அந்த நபரை போலீசார் கைது செய்து போலீஸ் நிலையம் அழைத்து சென்று விசாரித்ததில், சிங்காரப்பேட்டை அருகே உள்ள மாரம்பட்டி பகுதியைச் சேர்ந்த பூவரசன் (23) என்பது தெரியவந்தது.

இந்த சம்பவம் குறித்து கைதான பூவரசனிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தக்க சமயத்தில் அக்கம் பக்கத்தினர் ஓடிவந்து கோவிலில் நடைபெற இருந்த திருட்டு சம்பவத்தை தடுத்ததால், உண்டியல் பணம், நகைகள் திருடு போகமால் தப்பியது.

இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# போக்குவரத்து நெரிசலை தடுக்க திருவான்மியூர் உத்தண்டி இடையே உயர்மட்ட சாலை

சென்னை, ஆக. 22

சென்னையின் முக்கிய சாலையாக கிழக்கு கடற்கரை சாலை உள்ளது. திருவான்மியூர் முதல் அக்கரை வரை 6 வழிச்சாலையாக விரிவாக்கம் செய்யும் பணி கடந்த 2009ம் ஆண்டு தொடங்கியது. இதற்கு ரூ.940 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது. இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருவான்மியூர், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய பகுதிகளில் நில எடுப்பு பணி 15 பகுதிகளாக பிரிக்கப்பட்டு இழப்பீடு தொகை வழங்கப்பட்டு வருகிறது.

6 வழிச்சாலையாக அகலப்படுத்துவதற்கு கொட்டி வாக்கம் பகுதியில் ரூ.19 கோடியிலும், பால வாக்கம் பகுதியில் ரூ.18 கோடியிலும், ஈஞ்சம்பாக்கம், நீலாங்கரை மற்றும் சோழிங்க நல்லூர் பகுதிகளில் ரூ.135 கோடியிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் கிழக்கு



கடற்கரை சாலையில் 6 வழிச்சாலை பணியை வேகப்படுத்தும் ஆய்வு கூட்டம் அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் அக்கரைசந்திப்பில்சாலையோரம்கூடாரம்அமைத்து நடைபெற்றது. அப்போது அமைச்சர் எ.வ.வேலு கூறியதாவது:

போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை உயர் மட்ட சாலை அமைப்பதற்கு கருத்துரு தயாரிக்கப்பட்டு அரசு பரிசீலனை செய்து வருகிறது. உயர் மட்ட பாலம் டைடல் பூங்கா சந்திப்பில் தொடங்கி எல்பி சாலை சந்திப்பு, நீலாங்கரை, ஈஞ்சம் பாக்கம், அக்கரை வழியாக உத்தண்டியில் முடியும்.

இப்பகுதி மக்களின் தேவையை கருத்தில் கொண்டு எல்.பி. சாலை சந்திப்பு, திருவான்மியூர் ஆர்.டி.ஓ. அலுவலம், , நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், மற்றும் அக்கரை சந்திப்பில் பாலத்தில் ஏறி, இறங்கி செல்லும் வகையில் வடிவமைப்பு செய்யப்படும்.

இந்த பாலத்தின் மூலம் இப்பகுதியை 20 நிமிடங்களில் கடக்க முடியும். கிழக்குகடற்கரை சாலையில் நடைபெறும் 6 வழித்தட பணி அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் முடியும்.

நிலஎடுப்புசெய்தஇடங்களில் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் முடிந்து உள்ளன. இப்பணிகள் முடிந்த இடங்களிலும் மின்வாரிய உபகரணங்களை மாற்றி அமைக்கும் பணிகள் நடைபெறுகிறது. இந்த பணி முடிந்ததும் குடிநீர் குழாய் மற்றும் பாதாள கழிவுநீர் குழாய் அமைக்கும் பணிகள் இருபுறமும் நடைபெறும்.

அண்ணாசாலையில் இரும்பு மேம்பாலம் பணிக்கு மண்பரிசோதனை நடக்கிறது. கீழே மெட்ரோ ரெயில் பாதை உள்ளதால் அதற்கு ஏற்ப வடிவமைப்பு செய்து உள்ளோம். அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் அண்ணாசாலை மேம்பாலம் பணியை முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# பராமரிப்பு பணி: மின்சார ரெயில்கள் இன்று பகுதி நேரமாக ரத்து

சென்னை, ஆக. 22

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

அரக்கோணம் பணிமனையில் பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் மின்சார ரெயில்கள் பகுதி நேரமாக ரத்து செய்யப்படுகிறது. அதன்படி, சென்னை சென்டிரலில் இருந்து நாளை (வியாழக்கிழமை) மற்றும் வருகிற 24ம் தேதி காலை 9.10, 11 மணிக்கு புறப்பட்டு அரக்கோணம் வரும் மின்சார ரெயில், பகுதிநேரமாக திருவள்ளூர் அரக்கோணம் இடையே ரத்து செய்யப்படுகிறது. அதே தேதிகளில் காலை 11.15, 12 மணிக்கு அரக்கோணத்தில் இருந்து புறப்பட்டு சென்னை சென்டிரல் வரும் மின்சார ரெயில் அரக்கோணம் திருவள்ளூர் இடையே பகுதிநேரமாக ரத்து செய்யப்படுகிறது.

சென்னை சென்டிரலில் இருந்துகாலை 10மணிக்கு புறப்பட்டு திருத்தணி செல்லும் மின்சார ரெயில் பகுதிநேரமாக திருவள்ளூர் திருத்தணி இடையே ரத்து செய்யப்படுகிறது. திருத்தணியில் இருந்து மதியம் 12.35



மணிக்கு புறப்படும் சென்னை சென்டிரல் வரும் மின்சார ரெயில் பகுதிநேரமாக திருத்தணி திருவள்ளூர் இடையே ரத்து செய்யப்படுகிறது.

சென்னை சென்டிரலில் இருந்து காலை 9.50 மணிக்கு புறப்பட்டு ஆந்திர மாநிலம் திருப்பதி செல்லும் மின்சார ரெயில், சென்னை சென்டிரல்திருத்தணி இடையே பகுதி நேரமாக ரத்து செய்யப்படுகிறது. அதே போல, வேலூர் கண்டோன்மென்ட் ரெயில் நிலையத்தில் இருந்துகாலை 10மணிக்கு புறப்பட்டு அரக்கோணம் வரும் மின்சார ரெயில், சித்தேரி அரக்கோணம் இடையே பகுதிநேரமாக ரத்து செய்யப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


# கொளத்தூரில் மினி விளையாட்டு மைதானம்



சென்னை, ஆக. 22

கொளத்தூரில் மினி விளையாட்டு மைதானம் அமைக்க விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் டெண்டர் கோரியது. மினி விளையாட்டு மைதானம் மற்றும் உடற்பயிற்சி கூடத்துடன் குத்துச்சண்டை உள்ளரங்கு மைதானம் அமைக்க டெண்டர் கோரப்பட்டுள்ளது. முகப்பேர் விளையாட்டு அரங்கில் டென்னிஸ் மைதானத்தை சீரமைக்க டெண்டர் கோரப்பட்டுள்ளது.

# நெல்லை நம்பி கோயிலுக்கு பக்தர்கள் செல்ல தடை



நெல்லை, ஆக. 22

நாங்குநேரி அருகே உள்ள திருக்குறுங்குடி திருமலை நம்பி கோயிலுக்கு பக்தர்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. சூழல் சுற்றுலா பகுதியில் மழை பெய்து நீர்வரத்து அதிகமாக இருப்பதால் நம்பி கோயிலுக்கு பக்தர்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. நம்பி கோயிலுக்கு பக்தர்கள் செல்லவும், குளிக்கவும் அனுமதி இல்லை என களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பக துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

நமது தினகனி



## 'இது பேய் கதைதான்' 'கொட்டுக்காளி' படத்தை பார்த்துவிட்டு பாராட்டிய கமல்ஹாசன்



'கூழாங்கல்' திரைப்படம் பல அங்கீகாரங்களை இயக்குனர் பி.எஸ்.வினோத் ராஜுக்குப் பெற்றுத் தந்தது. இதற்குப் பிறகு, இவர் சூரியை வைத்து இயக்கியிருக்கிற திரைப்படம் 'கொட்டுக்காளி'. சிவகார்த்திகேயன் இப்படத்தைத் தயாரித்திருக்கிறார். இப்படம் பெர்லின், ரோட்டர்டேம் ஆகிய சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறது.

இத்திரைப்படத்தில் சூரியுடன் மலையாள நடிகை அனா பென் நடித்திருக்கிறார். இதுதான் இவர் நடிக்கும் முதல் தமிழ்த் திரைப்படம். இத்திரைப்படம் வருகிற ஆகஸ்ட் 23 ம் தேதி திரையரங்குகளில் வெளியாகவிருக்கிறது. இந்நிலையில், படத்தை பார்த்துவிட்டு நடிகர் கமல்ஹாசன் படக்குமுவை பாராட்டியுள்ளார். இது குறித்து வெளியிட்டுள்ள பதிவில், 'கிராமம் என்றால், சிமென்ட் சாலை, வாகன வசதி. செல்போன், டாஸ்மாக், சானிட்டரி நாப் 24 மணி நேர மின்சாரம் என 21 ஆன் நூற்றாண்டின் நவீன வசதிகள் நிறைந்த கிராமம் இருப்பினும் எங்க வீட்டு பிள்ளைக்குப் பேய் பிடிச்சுருக்கு பேய் ஓட்டக் கூட்டிப்போறோம்' என்று விசாரிப்பவர்களிடம் கூசாமல் சொல்கிறான் பாண்டியன் வழிமொழிகிறது குடும்பம். போகிற வழியெல்லாம் பிளாஸ்டிக் குடங்கள் விற்கும் வண்டி ஒன்று பேயாய் ஆடிச்செல்கிறது. கண்ணேறு தவிர்க்கும் அசுர முகங்கள் இன்னொரு வண்டியில் பேயாடுகிறது. நடுவழியில் டாஸ்மாக் பேய் என்று பல பேய்களின் ஆட்டம் தென்பட்டாலும் அவை பூசாரிகளால் விரட்ட முடியாத பேய்கள் எனப் புரிந்துகொள்கிறோம். இது பேய் கதைதான் காதல் பேய்க் கதை, நாயகியின் கண்ணில் பூமியின் பொறுமை தெரிகிறது., இவ்வாறு தெரிவித்துள்ளார்.



## ஆலியா, தீபிகா இல்லை...இந்தியாவின் அதிக வசூல் செய்த படத்தை கொடுத்த 16 வயது நடிகை

பாலிவுட்டில் பெண்ணை முக்கிய கதாபாத்திரத்தில் வைத்து எடுக்கப்பட்ட பல படங்கள் வெளியாகி இருக்கின்றன. இவ்வாறு உருவான பல படங்கள் உலகளவில் பாராட்டுகளை பெற்றிருக்கின்றன. அவ்வாறு ஆலியா பட், தீபிகா படுகோன் போன்ற முன்னணி நடிகைகள் நடிக்காமல் குறைவான பட்ஜெட்டில் உருவாகிய திரைப்படம் ஒன்று பல இதயங்களை வென்றது மட்டுமில்லாமல், சர்வதேச அளவில் அதிக வசூலையும் பெற்றது என்பது உங்களுக்கு தெரியுமா?. ஆம். ரூ.15 கோடி பட்ஜெட்டில் உருவாகியிருந்தாலும், உலகம் முழுவதும் சுமார் 912 கோடி ரூபாய் வசூலித்தது. இந்த படத்தின் முன்னணி நடிகை இரண்டு ஹிட் படங்களில் நடித்த பிறகு பாலிவுட்டை விட்டு வெளியேறினார். அந்த படம்தான் சீக்ரெட் சூப்பர்ஸ்டார். கடந்த 2017ல் வெளியான இப்படத்தில் அப்போது 16 வயதே ஆன ஜைரா வாசிம் முக்கிய வேடத்தில் நடித்தார். அவருடன் அமீர்கான், மெஹர் விஜ் மற்றும் ராஜ் அர்ஜுன் ஆகியோர் நடித்திருந்தனர். இப்படம் பார்வையாளர்களிடமிருந்து பெரிய அளவில் அன்பைப் பெற்றது. மேலும், இது இந்தியாவின் அதிக லாபம் ஈட்டிய படங்களில் ஒன்றாகவும் உள்ளது.

சீக்ரெட் சூப்பர் ஸ்டாரின் வெற்றியைத் தொடர்ந்து, பிரியங்கா சோப்ரா மற்றும் பர்ஹான் அக்தருடன் இணைந்து தி ஸ்கை இஸ் பிங்க் படத்தில் நடித்தார் ஜைரா வாசிம். இருப்பினும், இந்த படம் வெளியாவதற்கு முன்பே, பாலிவுட்டை விட்டு விலகுவதாக ஜைரா தெரிவித்தார்.

## வெளியானது 'அடங்காத அசுரன்' வீடியோ பாடல்



நடிகர் தனுஷ் இயக்கி நடித்திருந்த 'ராயன்' திரைப்படம் கடந்த மாதம் 26ம் தேதி திரையரங்குகளில் வெளியானது. ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்திருந்த இந்த படத்தில் தனுஷுக்கு தம்பிகளாக காளிதாஸ் ஜெயராம், சந்தீப் கிஷனும், தங்கையாக துஷாரா விஜயனும் நடித்திருந்தனர். எஸ்.ஜே. சூர்யா இதில் வில்லனாக நடித்தார்.

தனுஷ்நடித்தபடங்களிலேயேராயன்தான்அதிகவசூலித்தபடமாகும். உலகளவில் இதுவரை ரூ. 155 கோடி வரை வசூல் செய்துள்ளது என தகவல் வெளியாகியுள்ளது. 2024 ம் ஆண்டு வெளியான தமிழ் திரைப்படங்களில் ராயன் வசூலில் முதல் இடம் பெற்றுள்ளது. ராயன் படத்தின் 'வாட்டர் பாக்கெட்' வீடியோ பாடல் 25 மில்லியன் பார்வைகளை கடந்தது. இந்நிலையில், 'ராயன்' படத்தின் 'அடங்காத அசுரன்' வீடியோ பாடல் வெளியாகும் என பட நிறுவனம் அறிவித்திருந்தது. அதன்படி, தற்போது அந்த வீடியோ பாடல் வெளியாகியுள்ளது.

## விக்கி கவுசல் நடித்துள்ள 'சாவா' படத்தின் டீசர் வெளியீடு




பிரபல பாலிவுட் நடிகர் விக்கி கவுசல். இவர் இந்திய சினிமாவில் முன்னணி நடிகையாக இருக்கும் கத்ரீனா கைப்பின் கணவர் ஆவார். சமீபத்தில் பிரபல இயக்குனர் ஆனந்த் திவாரி இயக்கத்தில் இவர் 'பேட் நியூஸ்' என்ற படத்தில் நடித்தார். இப்படம் வசூல் ரீதியாகவும், விமர்சனம் ரீதியாகவும் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

அதனை தொடர்ந்து தற்போது, 'சாவா' என்ற படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தில் ராஷ்மிகா மந்தனா மற்றும் அக்சய் கண்ணா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இது சத்ரபதி சாம்பாஜி மகாராஜாவின் வாழ்க்கை வரலாற்றை மையமாக வைத்து எடுக்கப்பட்ட படமாகும். லக்ஷ்மன் உடேகர் இயக்கும் இப்படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்துள்ளார்.

தற்போது இந்த படத்தின் டீசரை தயாரிப்பாளர் தினேஷ் விஜன் அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளார். மேலும் இப்படம் வருகிற டிசம்பர் மாதம் 6ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இது குறித்த பதிவை நடிகை ராஷ்மிகா மந்தனா தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## விஜய் சேதுபதியுடன் மீண்டும் வித்தியாசமான படம் மூலம் இணையும் நித்யா மேனன்



நடிகர் விஜய் சேதுபதி நித்யா மேனன் இணைந்த வித்தியாசமான ஜானரில் ஒரு படம்உருவாகஉள்ளதுஎன்பதை பேட்டி ஒன்றின் மூலம் உறுதி செய்துள்ளார் நடிகை நித்யா மேனன்.

தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழா டெல்லியில் சமீபத்தில் நடைப்பெற்றது. இதில் சிறந்த நடிகைக்கான தேசிய விருதுக்கு திருச்சிற்றம்பலம் படத்தில் நடித்த நடிகை நித்யா மேனன் வென்றார்.

நித்திலன் சுவாமிநாதன் இயக்கத்தில் நடிகர் விஜய் சேதுபதி நடிப்பில் வெளியான 'மகாராஜா' திரைப்படம் விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது. அதை தொடர்ந்து ஆறுமுக குமார் தயாரிப்பில் விஜய் சேதுபதி நடித்துள்ள 'ஏஸ்' திரைப்படம் விரைவில் வெளியாக உள்ளது.

இந்நிலையில் அவர் அடுத்ததாக நடிக்க இருக்கும் படம் குறித்த அப்டேட் ஒன்று ஏற்கனவே வெளியாகி இருந்தாலும் தற்போது அது உறுதி செய்யப்பட்டுள்ளது. பாண்டிராஜ் இயக்கத்தில் விஜய் சேதுபதி நித்யா மேனன் லீட் ரோலில் நடிக்கும் படம் ஒன்று உருவாக உள்ளது. நித்யா மேனன் கொடுத்த பேட்டி ஒன்றில் இது குறித்து உறுதிப்படுத்தி உள்ளார்.

ஏற்கனவே 19 (1) (ஏ) என்ற மலையாள படத்தில் நடிகர் விஜய் சேதுபதியும் நித்யா மேனனும் இணைந்து நடித்துள்ளனர். மீண்டும் அவர்கள் ஒரு படத்தில் இணைவது குறித்து நித்யா மேனன் பேசுகையில் "அந்த படத்தில் எங்க இரண்டு பேரோட காம்பினேஷன் காட்சி ரொம்ப சின்னதா இருந்துது. இரண்டு நாட்கள் மட்டுமே அதன் படப்பிடிப்பு நடந்தது. அப்போ நாங்க இரெண்டு பேரும் சேர்ந்து ஒரு படம் பண்ணனும் என பேசி இருந்தோம். இப்போ நாங்க நடிக்க போற இந்த ஸ்கிரிப்ட்டை விட வேற ஒரு நல்ல ஸ்கிரிப்ட் எங்களுக்கு கிடைச்சு இருக்காது. இந்த படத்தில் நடிப்பதை நான் மிகவும் எக்ஸ்சைடட்டா பீல் பண்றேன். ரொம்பவே தனித்துவமான ஒரு கேரக்டர். வழக்கமா நான் செய்ற ஜானரை காட்டிலும் இது ரொம்பவே வித்தியாசமானது. பல வகையான ஜானர்களில் நடிப்பது எனக்கு ரொம்பவே பிடிக்கும்" என பேசி இருந்தார் நடிகை நித்யா மேனன்.

## வின்ஸ்டன்சலேம் ஓபன் டென்னிஸ்; முதல் சுற்றில் தோல்வி கண்ட சுமித் நாகல்



அமெரிக்காவின் வட கரோலினா மாகாணத்தில் வின்ஸ்டன் சலேம் ஓபன் டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் சுமித் நாகல், குரோஷியாவின் போர்னா கோரிக் உடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய போர்னா கோரிக் 64, 62 என்ற நேர் செட் கணக்கில் சுமித் நாகலை வீழ்த்தினார். இந்த தோல்வியின் மூலம் சுமித் நாகல் முதல் சுற்றுடன் தொடரில் இருந்து வெளியேறினார்.

## சர்வதேச டி20 கிரிக்கெட்; ஒரு ஓவரில் அதிக ரன்கள் யுவராஜ் சிங் சாதனையை முறியடித்த சமோவா வீரர்



2026ம் ஆண்டு டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற உள்ளது. இந்த தொடரில் மொத்தம் 20 அணிகள் கலந்து கொள்ள உள்ளன. இதில் தற்போது வரை 12 அணிகள் தகுதி பெற்றுள்ளன. மீதமுள்ள 8 இடத்திற்கு தகுதி சுற்று ஆட்டங்கள் நடந்து வருகின்றன.

கிழக்கு ஆசியபசிபிக் பிராந்தியத்திற்கான டி20 உலகக்கோப்பை தகுதி சுற்று போட்டி ஒன்றில் சமோவா வனுவாடு அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் ஆடிய சமோவா 20 ஓவர்களில் 10 விக்கெட்டை இழந்து 174 ரன்கள் குவித்தது. சமோவா தரப்பில் டேரியஸ் விசர் 132 ரன்கள் குவித்தார்.

இதையடுத்து 175 ரன் இலக்கை நோக்கி ஆடிய வனுவாடு அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டை இழந்து 164 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 10 ரன் வித்தியாசத்தில் சமோவா அணி வெற்றி பெற்றது. இந்நிலையில் இந்த ஆட்டத்தில் சதம் அடித்து அசத்திய டேரியஸ் விசர் சர்வதேச டி20 கிரிக்கெட்டில் ஒரு ஓவரில் அதிக ரன் அடித்த யுவராஜ் சிங், பொல்லார்டு, திபேந்திர சிங் ஐரி, நிகோலஸ் பூரன் (36 ரன்) ஆகியோரின் சாதனையை முறியடித்துள்ளார்.

அதாவது வனுவாடு வேகப்பந்து வீச்சாளர் நளின் நிபிகோ வீசிய ஒரு ஓவரில் டேரியஸ் விசர் 39 ரன்கள் எடுத்து உலக சாதனை படைத்தார். இந்த ஓவரில் டேரியல் விசர் மொத்தம் ஆறு பந்துகளில் ஆறு சிக்சர்கள் அடித்தார். மேலும் இந்த ஓவரில் மொத்தம் மூன்று நோபால்கள் வீசப்பட்டது.

இப்படி மொத்தமாக 39 ரன்கள் கிடைத்தது. இதன் மூலமாக சர்வதேச டி20 கிரிக்கெட்டில் ஒரு ஓவரில் அதிக ரன்கள் அடித்த வீரர் என்ர சாதனையை டேரியஸ் விசர் படைத்தார். சர்வதேச டி20 கிரிக்கெட்டில் ஒரு ஓவரில் அதிக ரன்கள் எடுக்கப்பட்ட விவரம்; டேரியஸ் விசர் (சமோசா) 39 ரன், யுவராஜ் சிங் (இந்தியா) 36 ரன், பொல்லார்ட்டு (வெஸ்ட் இண்டீஸ்) 36 ரன், ரோகித் சர்மா ரிங்கு சிங் (இந்தியா) 36 ரன், திபேந்திர சிங் ஐரி (நேபாளம்) 36 ரன், நிகோலஸ் பூரன் (வெஸ்ட் இண்டீஸ்) 36 ரன்

## மகளிர் டி20 உலகக்கோப்பை: ஐக்கிய அரபு அமீரகத்துக்கு மாற்றம்?

மகளிர் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் வங்காளதேசத்தில் அக்டோபர் 3ம் தேதி முதல் 20ம் தேதி வரை நடைபெறும் என சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) அறிவித்திருந்தது. ஆனால், தற்போது வங்காளதேசத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக டி20 உலகக் கோப்பை தொடரை வேறு இடத்திற்கு மாற்ற ஐ.சி.சி திட்டமிட்டுள்ளது. டி20 உலகக்கோப்பை தொடரை இந்தியாவில் நடத்த பி.சி.சி.ஐ மறுப்பு தெரிவித்துவிட்டது. மழைக்காலம் என்பதால் போட்டியை நடத்த வேண்டாம் என முடிவு எடுக்கப்பட்டுள்ளது. யு.ஏ.இ (ஐக்கிய அரபு அமீரகம்) இலங்கை, ஜிம்பாப்வே ஆகிய 3 இடங்களில் ஏதாவது ஒன்றில் உலகக்கோப்பை தொடர் நடைபெறலாம் என தகவல்கள் வெளியாகி உள்ளது. இந்த நிலையில், மகளிர் டி20 உலகக்கோப்பை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற அதிக வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. துபாய், அபுதாபி, சார்ஜாவில் உலக தரம் வாய்ந்த மைதானங்கள் இருப்பதால் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது. இந்த விவகாரத்தில் ஐ சி சி விரைவில் இறுதி முடிவு எடுத்து அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




## அவருடன் இணைந்து வேலை செய்ய மோர்னே மோர்கல் மிகவும் விரும்புவார் அல்பி மோர்கல் கருத்து



இந்திய ஆண்கள் கிரிக்கெட் அணியின் புதிய பந்துவீச்சு பயிற்சியாளராக தென் ஆப்பிரிக்க முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான மோர்னே மோர்கல் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் எதிர்வரும் வங்காளதேசத்திற்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து பயிற்சியாளராக செயல்பட உள்ளார்.

இந்திய அணியின் புதிய தலைமை பயிற்சியாளரான கவுதம் கம்பீரின் பரிந்துரைப்படி மோர்னே மோர்கல் புதிய பந்துவீச்சு பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மோர்னே மோர்கல் வெளிநாடுகளில் பெரிய அனுபவத்தை கொண்டுள்ளார்.

எனவே வருன் ஆஸ்திரேலியா தொடரில் அவர் இந்திய பவுலர்களுக்கு மிகப்பெரிய உதவியாக இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் இந்திய அணியில் தற்போதுநம்பர்1 பவுலராக இருக்கும் ஜஸ்ப்ரித் பும்ராவுடன் இணைந்து செயல்பட மோர்னே மோர்கல் விரும்புவார் என அவருடைய சகோதரர் அல்பி மோர்க்கெல் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, உறுதியாக தெரியாது (இந்தியாவில் பிடித்த பந்துவீச்சாளர்). ஆனால் அவருக்கு ஜாஹீர் கான் மற்றும் ஜஸ்ப்ரித் பும்ரா மிகவும் பிடிக்கும் என நினைக்கிறேன். ஏற்கனவே சொன்னது போல அவர் என்ன நினைக்கிறார் என்பது துல்லியமாக எனக்குத் தெரியாது.

ஆனால் ஜஸ்ப்ரித் பும்ரா தற்சமயத்தில் உலகின் சிறந்த ஆல் பார்மட் பவுலராக திகழ்கிறார். அவர் மிகவும் ஸ்பெஷலானவர். எனவே அவருடன் இணைந்து வேலை செய்ய மோர்னே மோர்கல் மிகவும் விரும்புவார் என்பதை உறுதியாகச் சொல்வேன். இவ்வாறு அவர் கூறினார்.

## சர்வதேச கிரிக்கெட்டில் 16 ஆண்டுகள் நிறைவு; விராட் கோலி குறித்து தினேஷ் கார்த்திக் நெகிழ்ச்சி பதிவு



இந்திய அணியின் நட்சத்திர வீரரான விராட் கோலி நவீன கிரிக்கெட்டில்மிகச்சிறந்தபேட்ஸ்மேனாகபோற்றப்படுகிறார். கடந்த 2008ம் ஆண்டு 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கோப்பை தொடரில் இந்திய அணிக்கு தலைமை தாங்கி கோப்பையை வென்று கொடுத்து சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமான அவர் குறுகிய காலத்திலேயே நிலையான இடத்தை பிடிக்கும் அளவுக்கு இந்தியாவின் மேட்ச் வின்னராக அவதரித்தார்.

அப்போதிலிருந்து உலகின் அனைத்து எதிரணிகளையும் பந்தாடி வரும் அவர் 26000+ ரன்களையும் 80 சதங்களையும் அடித்து இந்தியாவின் வெற்றிகளில் பங்காற்றி வருகிறார். மூன்று வகையான கிரிக்கெட்டிலும் மாபெரும் பேட்ஸ்மேனாக பார்க்கப்படும் விராட் கோலி இன்றளவும் வளர்ந்து வரும் வீரர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக திகழ்ந்து வருகிறார். அதேபோல நிறைய வெளிநாட்டவர்களும் அவரை பின்பற்றுகின்றனர். இதனிடையே கடந்த ஆகஸ்ட் 18ம் தேதி சர்வதேச கிரிக்கெட்டில் தன்னுடைய 16வது வருட பயணத்தை விராட் கோலி நிறைவு செய்துள்ளார். இதையடுத்து விராட் கோலிக்கு பல்வேறு தரப்பினர் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரரான தினேஷ் கார்த்திக் விராட் கோலிக்கு வாழ்த்து தெரிவித்து தனது எக்ஸ் வலைத்தளப்பக்கத்தில் நெகிழ்ச்சி பதிவு ஒன்றை பதிவிட்டுள்ளார். தினேஷ் கார்த்திக் வெளியிட்ட பதிவில், உங்களுடன் விளையாடியதில் மகிழ்ச்சி கேப்டன். 16 ஆண்டுகள் ஆகியும் தீ இன்னும் பிரகாசமாக எரிகிறது என பதிவிடப்பட்டுள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.